# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 135/2018 நாள்.16.9.25

PW1- திரு.கண்ணன் , த /பெ. திரு. துரைமாணிக்கம்

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் 3ஆண்டு பொறியியல் பட்டய படிப்பு படித்திருக்கிறேன். நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் நெய்வேலியில் என்எல்சியில் முதன்மை மேலாளராக பணியாற்றி வருகிறேன். வழக்கிற்கு விபரம் சொன்னது யார் என்றால் நான்தான். என் உடன் பிறந்தவர்கள் எல்லோரும் ஆண்கள் என்றால் இல்லை சகோதரிகளும் உள்ளார்கள். பிரதிவாதிகள் என் சகோரர்கள் மற்றும் அவர்கள் வாரிசுகள் என்றால் ஆமாம். என் சகோதரர் மணிமொழி வெளிநாட்டில் வேலை பார்த்துவிட்டு தற்போது உள்ளூரில் விவசாயம் செய்து வருகிறார். கிள்ளிவளவன் என் வேலை செய்தார் என்றால் வீட்டில் இருந்தார் தற்போது இறந்துவிட்டார். இந்த வழக்கு எத்தனை சொத்துக்களுக்கு போட்டுள்ளேன் என்றால் இரண்டு. ஒன்று தேப்பெருமாநல்லூர் வீடு மற்றொன்று புனல்வாசல் கிராமத்தில் உள்ள வீடு மனை, விவசாய நிலங்கள். வழக்கு சொத்துக்கள் எல்லாம் என் அப்பாவால் கிரையம் வாங்கபட்டது என்றால் ஆமாம். என் பிராதில் பக்கம் 5 பாரா 3இல் 1991ல் குடும்ப உடன்படிக்கை சொல்லியுள்ளேனே அதன் தேதி சொல்லவில்லை என்றால் ஆமாம். என் சகோதரர் ரவிவர்மன் எப்போது இறந்தார் என்றால் தேதி நினைவில் இல்லை. 13.2.1991 இல் இறந்ததாக பிராதில் சொல்லியுள்ளேனே அது சரியா என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் எந்த தேதியில் ஏற்பட்டது என்றால் 23.12.1991. வா.சா.ஆ.2 பதிவு செய்யபடாத ஆவணம் என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 எப்போது எழுதபட்டது என்றால் என் அண்ணன் ரவிவர்மன் இறந்தபிறகு ஏற்படுத்தபட்டது. என் சகோதரர் ரவிவர்மன் 13.12.1991இல் இறந்ததாக வா.சா.ஆ.2இல் உள்ளது என்றால் ஆமாம். அது தட்டச்சு தவறாக உள்ளது. வா.சா.ஆ.2 இல் 6வது நபராக என் அண்ணன் ரவிவர்மன் மனைவி உமா கையெழுத்து போட்டதாக உள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 பக்கம் 2இல் 3வது நபர் மணிமொழி செக்கான்கன்னி தேப்பெருமாநல்லூர் வீட்டை தன் முயற்சியால் புதுபித்து கட்டியிருந்தாலும் அவர் முயற்சியால் தன் சுயசம்பாத்தியத்தில்

பழுவத்தான்கட்டளை கிராமத்தில் மனை வாங்கி அதில் தம் சொந்த பணத்தை கொண்டு தனிபட்ட முறையில் புதிய வீடு கட்டி வசித்து வருவதாக வாசகம் உள்ளது என்றால் ஆமாம். பக்கம் 3 இல் அனைவரும் ஒருமித்து புனல்வாசல் கிராமத்தில் உள்ள 138 குழி நிலத்தையும் அங்குள்ள வீட்டையும் கொடுத்துவிடுவதாக உறுதிசெய்யபட்டதாக கண்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ2 இல் பக்கம் 2இல் என் சகோதரரும் 6வது நபரின் கணவருமான ரவிவர்மன் அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே தன் சொந்த சம்பாத்யத்தை கொண்டு கும்பகோணம் வட்டிபிள்ளையார் கோவில் தெருவில் மனை வாங்கி கட்டியுள்ள வீட்டிற்கு தான் சென்றுவிடுவது என்று அபிராயபட்டு தனக்கு சொத்துக்கள் எதுவும் வேண்டாம் என்று ரவிவர்மன் சொல்லுவதுபோல் எழுதபட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ஆவணம் ரவிவர்மன் இறந்து 10ஆம்நாளில் எழுதபட்டது என்றால் ஆமாம். ரவிவர்மன் இறந்து 10ஆம் நாளில் வா.சா.ஆ2 இல் கண்டதுபோல் பஞ்சாயத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அந்த பஞ்சாயத்தில் 6ஆம் நபராக ரவிவர்மன் மனைவி உமா கையெழுத்த போட்டதாக சொல்லுவதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. ரவிவர்மன் குடும்பத்திற்கு ஏன் சொத்து கொடுக்கவில்லை என்றால் பூர்விக நிலத்தை விற்றுதான் என் அப்பா படிக்க வைத்தார் அதனால் அவர் சொத்து கொடுக்காத போது ஏற்றுகொண்டார். ரவிவர்மனை படிக்க வைக்க சொத்தை விற்று படிக்க வைத்ததாக சொல்லுகிறேனே அதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராதில் பக்கம் 9இல் பத்தி 6இல் வா.சா.ஆ.2 ஆவணம் உண்மையல்ல என்று தெரியவந்தால் பாகம் பிரித்து கொள்ள தயாராக இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். ரவிவர்மன் குடும்பத்தை சேர்ந்த உமா மற்றும் குழந்தைகளுக்கு பங்கு கொடுக்க வா.சா.ஆ.2 ஆவணத்தை ஏற்றுகொள்ளாத போது பங்கு கொடுக்க ஆட்சேபணை இல்லை. மணிமொழி திருவையாறு முன்சிப் நீதிமன்றத்தில் அ.வ எண்.82/1994 தாக்கல் செய்த வழக்கு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். கிள்ளிவளவன் செட்டில்மெணட் எழுதி வைத்த செட்டில்மெண்ட் நான் ஒப்பு கொள்கிறேனா என்றால் இல்லை. நான் தவறான விபரங்களை பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல., வா.சா.ஆ.2 இல் 6வது நபராக 1ஆம் பிரதிவாதி உமா எந்த காலத்திலும் கையெழுத்து போடவில்லைஎ ன்றால் சரியல்ல. வா.சா.ஆ2 வழக்கிற்காக தயார் செய்யபட்டது என்றால்

சரியல்ல.1 முதல் 3பிரதிவாதிகளுக்கு தாவா சொத்துகளில் பங்கு கிடைக்ககூடியது என்றால் சரிதான்.

4, 5ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

என் அப்பா பெயர் என்ன என்றால் துரைமாணிக்கம். என் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் இளந்திரையன், ரவிவர்மன், மணிமொழி, கிள்ளிவளவன் மற்றும் நான், சகோதரி ராஜம். ராஜத்திற்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் திருமணம் நடக்காமலேயே இறந்துவிட்டார். ராஜம் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்று பிராதில் சொல்லவில்லை என்றால் ஆமாம். 2ஆம் வாதி மணிமொழி சார்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். அவர் என்ன உறவு என்றால் அண்ணன். 6, 7 பிரதிவாதிகள் யார் என்றால் வழக்கில் உள்ள சொத்தை வாங்கியதாக அறிகிறேன். கும்பகோணத்தில் இருக்கும் தேப்பெருமாநல்லூர் இடத்தை வாங்கியுள்ளார். என் அப்பா என்ன வேலை செய்தார் என்றால் அரசு உதவி பெறும் பள்ளியில் ஆசிரியராக இருந்தார். பூர்விகம் என்ன ஊர் என்றால் திருவையாறு அருகில் உள்ள புனல்வாசல். வழக்கில் 4, 5 பிரதிவாதி என்ன கட்சி செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். என் சகோதரர் 2ஆம் வாதி அ.வ எண் 82/1994 என்ற வழக்கை 4, 5 பிரதிவாதிகளின் தகப்பனார் கிள்ளிவளவனுக்கு எதிராக தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். அந்த வழக்கிலேயே கிள்ளிவளவன் இந்த வழக்கு ஏ அட்டவணை சொத்து பொறுத்து என் அப்பா உயில் எழுதி வைத்ததாக சொல்லியுள்ளார் என்றால் தெரியாது. அந்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரியல்ல. அந்த வழக்கின் தீர்ப்பை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளோம். தாவா ஏ அட்டவணையும், சி அட்டவணையும் ஒரே சொத்தா என்றால் சி அட்டவணை சொத்து ஏ அட்டவணை சொத்தின் ஒரு பகுதி. ஏ அட்டவணை சொத்தில் எத்தனை அயிட்டம் உள்ளது என்றால் 3பேருக்கு உள்ளது 3 அயிட்டமாக குறிப்பிட்டுள்ளோம். அதில் விஸ்தீர்ணம் குறித்து சொல்லவில்லை என்றால் ஆமாம். 1வது அயிட்டம் எவ்வளவு விஸ்தீர்ணம் என்றால் விஸ்தீர்ணம் சொல்லவில்லை நீள அகலம்தான் சொல்லியுள்ளோம். ஏ அட்டவணை சொத்து என்பது என் அப்பாவின் சுய சாம்பாத்தியம் என்றால் ஆமாம். அதனால் அந்த சொத்தை யாருக்கு வேண்மானாலும் எழுதி வைக்க உரிமை உள்ளது என்றால் வாங்கும்போது பூர்விக சொத்தை விற்றுதான் வாங்கபட்டது. பூர்விக சொத்தை

விற்கபட்டதாக பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சாட்சி பிராதை படித்து பார்த்துவிட்டு சாட்சி பதில் சொல்லவில்லை. நான் திருவையாறு நீதிமன்றத்தில் அ.வ எண் 308/1995 என்ற வழக்கு போட்டேனா என்றால் இல்லை. அ.வ எண் 308/1995வழக்கில் கிள்ளிவளவன் அவருக்கு ஏற்பட்டுள்ள உயில் குறித்து சொல்லியுள்ளார் என்றால் நான் வழக்கு போடவில்லை.உயில்படி கிடைத்த சொத்தை கிள்ளிவளவன் அவர் வாரிசுகளுக்கு செட்டில்மெண்ட் எழுதியுள்ளார் என்றால் ஆமாம். ஏ அட்டவணை சொத்தும் சி அட்டவணை சொத்தும் இரண்டும் சேர்ந்து ஒரே சொத்தா என்றால் ஆமாம் ஏ அட்டவணை சொத்தில் சி அட்டவணை சொத்து ஒரு அங்கம். நான் பாகபிரிவினை கேட்பது சி அட்டவணை சொத்துக்கு மட்டும் என்றால் இல்லை எல்லா சொத்துக்கும். நான் 4, 5 பிரதிவாதிகள் எனது அப்பா உயில் எழுதியதாகவும், அதை மறுத்து கட்சி சொல்லவில்லை என்றால் ஆமாம். என் அப்பா இறந்தவுடன் உயில் எழுதிய விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. என் அப்பா எப்போது இறந்தார் என்றால் 1993. அப்பா இறந்து பத்துநாளில் உயில் எழுதியது தெரியுமா என்றால் கிள்ளிவளவன் இறந்த பிறகுதான் தெரியும். கிள்ளிவளவன் வாரிசுகள் 4, 5 பிரதிவாதிகள் அவர்கள் எதிர் வழக்குரையில் முந்தைய வழக்குகளான 82/1994 , 308/1995 வழக்குகளில் உயில் பற்றி சொல்லியது பற்றி சொல்லியுள்ளார் என்றால் சாட்சி 4, 5 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையை படித்துபார்த்துவிட்டு சொல்லியுள்ளார்கள் என்று சொல்கிறார். உயில் எழுதிய விபரம் எனக்கு 25 ஆண்டுகளுக்கு முன்பே தெரியும் என்று சொல்லியுள்ளார் என்றால் தெரியாது. கிள்ளிவளவன் எப்போது இறந்தார் என்றால் தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்யும் முன்பு உயில் விபரம் தெரியும் என்றால் ஆமாம். குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஓம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.